4. குழுவின் அறிக்கை அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுவின் அறிக்கை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. நா. இராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2023 ஆம் ஆண்டுக்கான பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் நான்காவது அறிக்கையைக் குழுவின் சார்பாக உவகையுடன் பேரவைக்கு அளிக்கிறேன்.*

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 19] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (மூன்றாவது திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (மூன்றாவது திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (மூன்றாவது திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS